**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திரு. A. தமிழ்செல்வன், எம்.எல்.,**

**முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24ம் நாள் செவ்வாய்கிழமை**

**IA.1/2024**

**in**

**OS.346/2022**

**(CNR.NO.TNVP02-001188-2022)**

அம்சா .... மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

இலக்கியா ....எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 20.06.2024 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 05.07.2024 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 21.09.2024 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. சி.கே.தேசிங்குராஜா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சங்கர் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனு சி.பி.சி. கட்டளை 6 விதி 17-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அதில் அசல் வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் திருத்தல் விபரத்தில் குறிப்பிட்டுள்ள

விபரங்களை மேற்படி எதிர்வழக்குரையில் திருத்தம் மேற்கொள்ள உத்திரவு செய்ய பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது.

## 2. மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம் பின்வருமாறு :-

மனுதாரர் தரப்பில் மேற்படி மனுவில் தான் மனுதாரர் என்றும் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும் மேற்படி தாவா பிராம்சரி நோட்டின் பேரில் வாதி தன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி அசல் வழக்கில் தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும் மேற்படி வழக்கில் வாதி தரப்பில் முதன்மை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டு, தனது தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்தா வைக்கப்பட்டுள்ளது என்றும் இந்த நிலையில் குறுக்கு விசாரணை செய்ய ஆவணங்களை பார்க்கும் போது, தான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் வாதியின் மாமியார் கல்யாணி என்று குறிப்பிடுவதற்கு பதிலாக கை தவறுதலாக தட்டச்சு செய்யும் போது பிரதிவாதியின் மாமியார் கல்யாணி என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றும் உத்திரவு செய்த தர வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் ஆகவே சமூகம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து அசல் வழக்கில் தான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் திருத்தல் விபரத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்களை மேற்படி எதிர்வழக்குரையில் திருத்தம் மேற்கொள்ள உத்திரவு செய்ய வேண்டியது அவசியமும் நியாயமுமாய் இருக்கிறது என்றும் இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் சம்பவிக்கும் என்றும் மனு மற்றும் அபிடவிட்டில் கூறப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம் பின்வருமாறு:-**

மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள சி.பி.சி. ஆர்டர் 6 ரூல் 17 மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லக்கூடியதுமல்ல, மேற்படி மனு சட்டப்படி எடுத்த எடுப்பிலேயே எதிர்மனுதாரர்/வாதியின் அதிகபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய அருகமானதாகும் என்றும் மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள சி.பி.சி. ஆர்டர் 6 ரூல் 17 கீழான மனுவில் குறிப்பிட்டுள்ள அம்சங்கள் யாவும் உண்மையல்ல என்றும் மேலும் மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ள அம்சங்களை இந்த எதிர்மனுதாரர்/வாதி குறிப்பாக மறுதளிக்கிறார் என்றும் மறுதளிக்கப்பட்ட அம்சங்களை மனுதாரரே ரூசு செய்ய வேண்டியது என்றம் மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ள அம்சங்களான தாவா பிராம்சரி நோட்டின் பேரில் எதிர்மனுதாரர் மனுதாரர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி அசல் வழக்கில் மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பில் முதன்மை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்தா வைக்கப்பட்டுள்ளது என்றும் இந்த நிலையில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதியின் மாமியார் கல்யாணி என்று குறிப்பிடுவதற்கு பதிலாக கை தவறுதலாக தட்டச்சு செய்யும் போது பிரதிவாதியின் மாமியார் கல்யாணி என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றும் உத்திரவு செய்து தர வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், ஆகவே, சமூகம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து அசல் வழக்கில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள

எதிர்வழக்குரையில் திருத்தல் விபரத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்களை மேற்படி எதிர்வழக்குரையில் திருத்தம் மேற்கொள்ள உத்திரவு செய்ய வேண்டியது அவசியமும், நியாயமுமாய் இருக்கிறது என்றும் இல்லையேல் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் சம்பவிக்கும் என்று குறிப்பிட்டுள்ள அம்சங்களை இந்த எதிர்மனுதாரர்/வாதி குறிப்பாக மறுதளிக்கிறார் என்றும் மறுதளிக்கப்பட்ட அம்சங்களை மனுதாரரே ருசு செய்ய வேண்டியது என்றும் மேலும் அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி PW-1யை குறுக்கு விசாரணைக்காக வாய்தா வைக்கப்பட்டுள்ள நிலையில் மனுவின் மனுதாரர்/பிரதிவாதிக்கு இவ்வழக்கில் ஜெயிக்கக்கூடிய அம்சங்கள் ஏதும் இல்லாத காரணத்தினால் இவ்வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர்/பிரதிவாதி தற்போது இம்மனுவினை தாக்கல் செய்துள்ளனர் என்றும் மேற்படி ஆர்டர் 6 ரூல் 17 மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லக்கூடியதும் அல்ல என்றும் அங்கீகரிக்கக்கூடியதும் அல்ல என்றும் அதன் அடிப்படையில் இம்மனு சட்டப்படி தள்ளுபடிக்கு அருகமானதாகும் என்றும் இந்நிலையில் தாவா எதிர்வழக்குரையில் பொய்யான அம்சங்களை சேர்க்கும் நோக்கில் எதிர்வழக்கரை திருத்தப்பட்டால் அது எதிர்மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பை ஏற்படுத்துவதோடு அல்லாமல், மேலும் நீதியை தவறான பாதைக்கு கொண்டு செல்லும் வாய்ப்பு உள்ளது என்றும் மேலும் இந்த திருத்தல் இந்த எதிர்மனுதாரர்/வாதி கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்ய வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகுவார் என்றும் மேலும் இந்த நெம்பர் மனுதாரர்/பிரதிவாதி வழக்கின் அனைத்து அம்சங்களையும் தனது எதிருரையில் பொய் என மறுதளித்துள்ள நிலையில் தாவா பிரதிவாதி தாவா பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என

மறுதளிக்காத நிலையில் இவ்வாறான மனுக்கள் தாக்கல் செய்வது வேடிக்கையாகவும், விந்தையாகவும் உள்ளது என்றும் மேற்படி மனுவில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட அம்சங்களை தவிர ஏனைய பிற அம்சங்களை இந்த எதிர்மனுதாரர்/வாதி குறிப்பாக மறுதளிக்கிறார் என்றும் அதனை மனுதாரர்/பிரதிவாதியே ருசு செய்ய வேண்டியது என்றும் மேற்படி மனுவில் கூடுதல் ஆட்சேபணை தாக்கல் செய்யும் உரிமையை இந்த எதிர்மனுதாரர்/வாதி ரிசர்வு செய்து கொள்கிறார் என்றும் எனவே பொய்யான அம்சங்களின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை இந்த எதிர்மனுதாரர்/வாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் சமூகம் கோர்ட்டார் அவர்களை இந்த எதிர்மனுதாரர்/வாதி பிரார்த்திக்கின்றார் என்றும் ஆட்சேபணையில் கூறப்பட்டுள்ளது.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் விசாரித்து குறியிடப்படவில்லை. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

## 5. தீர்வுக்கான பிரச்சினை :-

மனுதாரர் மனுவில் கோரிய பரிகாரம் வழங்கி மனு அனுமதிக்கத்தக்கதா அல்லது இல்லையா என்பதே இம்மனுவில் தீர்வு காண வேண்டிய பிரச்சனையாகும்?

## 6. தீர்வு :-

மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும் பிரதிவாதி தாக்கல் செய்த

எதிர்வழக்குரையில் 2வது பக்கத்தில் 4வது பத்தியில் முதல் வரியில் பிரதிவாதியின் மாமியார் கல்யாணி என்பதை வாதியின் மாமியார் கல்யாணி என்று திருத்தம் செய்யப்பட வேண்டியது அவசியம் என்றும் மேற்படி தவறானது தவறுகையினால் ஏற்பட்டுள்ளது என்றும் ஆகையால் திருத்தத்தை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

7. மாறாக, எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தம்முடைய வாதத்தில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பு சாட்சி வா.சா.ஆ.1 குறுக்கு விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது என்றும் இந்த நிலையில் வழக்கின் முடிவினை காலதாமதப்படுத்த பொய்யான காரணங்களுடன் தாக்கல் செய்துள்ள இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் வாதிட்டார்.

8. இரு தரப்பு வாதமும் வழக்கு ஆவணங்களும் கவனத்துடன் கருத்தில் கொள்ளப்பட்டது.

9. சி.பி.சி. கட்டளை 6 விதி 17ன் கீழ் தரப்பினர்கள் அவர்களது வாதுரைகளை திருத்த உரிமையியல் நடைமுறை சட்டம் அனுமதிக்கவில்லை. ஆனால் வழக்கு விசாரணைக்கு முன்பான திருத்தமானது இலகுவான முறையில் அனுமதிக்க இயலும். ஆனால் வழக்கு விசாரணைக்கு பிறகு கோரும் திருத்தமானது தவறானது, போதுமான கவனம் இருந்தும் வழக்கு விசாரணைக்கு முன்பாகவே அதனை திருத்த நடவடிக்கை எடுக்க இயலாமல் போய்விட்டது என்றும் காட்டும் பட்சத்தில் அனுமதிக்கத்தக்கது. ஆகவே, வழக்கு விசாரணைக்கு பிறகு வாதுரைகளை திருத்த முழுமையான தடை எதுவும் இல்லை என்று முன் தீர்ப்புகளின் படி தெரியவருவதால் மனுதாரர்

கோரும் திருத்தமானது அவசியமானது என்பதால் இந்த மனுவை அனுமதிப்பதே நீதியின்பால் சரியானது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறே தீர்வு காண்கிறது.

**முடிவாக,** மனு செலவுத் தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 24.09.2024 இன்று பகரப்பட்டது.

/ஒப்பம்/A.தமிழ்செல்வன்,
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**இணைப்பு :-**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை)

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை.)

/ஒப்பம்/A.தமிழ்செல்வன்,
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.